**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.50/2019**

| Deposition of Name | ராஜேந்திரன் Rtd.SI | Prosecution | LW-15 as PW-5 |
|---|---|---|---|
| Father Name | சுப்பிரமணியன் | Defence | |
| முகவரி | தொழுதூர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 63/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**04.11.2025 எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கடந்த 2021 ம் ஆண்டு ஆணைக்காரன் சத்திரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.11.2021 ம் தேதி பணி ஓய்வு பெற்று மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். வழக்கு சமயத்தில் நான் திருவெண்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது கடந்த 22.10.2016 ம் தேதி 21.00 மணிக்கு கோகுல்நாத் என்பவர் நிலையம் ஆஜராகி புகார் மனுவை பெற்று திருவெண்காடு காவல்நிலைய குற்ற எண் 461/2016 இதச பிரிவுகள் 279, 337 கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இந்த வழக்கில் இறந்து போன முருகன் த/பெ கலியமூர்த்தி என்பவரது பிரேத பரிசோதனை பரிந்துரை கடித்தை நான் எடுத்து சென்றேன். பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தேன். பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துக்கொள்ளப்படுகிறது.**